பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

09 11 2025 SUNDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சட்ட உதவிகள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில், மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தமிழக அரசு நடத்திய மருத்துவ முகாம்கள் மூலம் இதுவரை 8 லட்சம் பேர் பயனடைந்துள்ளதாக மாநில மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் திரு மா சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

3. திமுக ஆட்சியில் மாநிலத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

4. போதைப் பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த தமிழக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

5. தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

சட்ட உதவிகள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில், மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேசிய சட்டப் பணிகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, புதுதில்லியில் நேற்று நடைபெற்ற தேசிய மாநாட்டை அவர் தொடங்கி வைத்தார்.

நீதி அனைவருக்கும் சென்றடையும் போது தான், அது சமூக நீதியின் அடித்தளமாக மாறும் என்று அவர் தெரிவித்தார்.

தேசிய அளவிலிருந்து உள்ளூர் நிலை வரை, சட்டப்பணி அதிகாரிகள் நீதித்துறைக்கும் மக்களுக்கும் இடையே பாலமாக செயல்பட வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

கடந்த 11 ஆண்டுகளில் நீதித்துறை வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும். இந்த நடவடிக்கைகள் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல்லாண்டு காலமாக நடைமுறையில் இருந்த குற்றவியல் சட்டங்கள் மாற்றப்பட்டு, புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

நீதித்துறையின் செயல்பாடுகள் மின்னணுமயமாக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தீர்ப்புகளை 18 மொழிகளில் மொழிபெயர்க்க உச்சநீதிமன்றம் மேற்கொண்ட நடவடிக்கைக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

இதன்மூலம் 80 தீர்ப்புகள் மாநில மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த 30 ஆண்டுகளில் தேசிய சட்டப்பணிகள் ஆணையம் மக்களுக்கு நீதி வழங்கும் நடைமுறைகளை எளிமைப்படுத்தியுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. பி.ஆர். கவாய், மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**>>>>><<<<<**

தமிழக அரசு நடத்திய மருத்துவ முகாம்கள் மூலம் இதுவரை 8 லட்சம் பேர் பயனடைந்துள்ளதாக மாநில மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் திரு மா சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை, அசோக் நகரில் நேற்று நடைபெற்ற மருத்துவ முகாமை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த மூன்று மாதங்களாக சனிக்கிழமைகளில், அனைத்து மாவட்டங்களிலும் 484 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

மாநிலம் முழுவதும் ஆயிரத்து 256 முகாம்களை நடத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த முகாம்களில் பொது மருத்துவம், குழந்தைகள் நலன், இதய மருத்துவம் உள்ளிட்ட 17 பிரிவுகளில் கட்டணமின்றி பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக திரு. மா. சுப்பிரமணியன் கூறினார்.

>>>>><<<<<

திமுக ஆட்சியில் மாநிலத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலம் மாவட்டம், ஓமலூரில் நேற்றிரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், தமிழகத்தில் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 104 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும், 6 ஆயிரத்து 999 சிறுமிகள் வன்கொடுமைகளுக்கு ஆளாகியிருப்பதாகவும் சமூகநலத்துறை அமைச்சரே கூறியிருப்பதாக தெரிவித்தார்.

பாதிப்புகள் ஏற்படாமல் தடுப்பதே அரசின் நடவடிக்கையாக இருக்க வேண்டும் என்றும், பணம் கொடுப்பது பெருமை அல்ல என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தினார்.

>>>>><<<<<

மாநிலத்தில் போதைப் பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த தமிழக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

தருமபுரியில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதற்கு போதைப்பொருள் புழக்கமே காரணம் என்று தெரிவித்தார்.

திமுக அளித்த 525 தேர்தல் வாக்குறுதிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்படவில்லை என்று அவர் குறை கூறினார்.

தருமபுரி மாவட்டத்தில் காவிரி உபரிநீர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை திமுக அரசு செயல்படுத்தவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்காக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும். குறிப்பாக, தருமபுரி மாவட்டத்தில் ஆயிரத்து 330 கோடி ரூபாய் மதிப்பிலான சாலைப் பணிகளை நிறைவேற்றியுள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

சர்தார் வல்லபாய் படேலின் 150-வது பிறந்த தினத்தை முன்னிட்டு, நாட்டின் பல்வேறு இடங்களில் ஒற்றுமை அணிவகுப்பு நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தூத்துக்குடியில் நேரு யுவகேந்திரா சார்பில் நடைபெற்ற ஒற்றுமை நடைபயணத்தில் ஏராளமான மாணவ, மாணவிகள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - லட்சுமணன் 55 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

தமிழகத்தில் தென்மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் கனமழை பெய்யும் என்றும், மாநிலத்தின் பிற பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தென்காசி மாவட்டத்தில் நேற்றிரவு பரவலாக மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – செந்தில் 25 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

இருவரிச் செய்திகள்

யுக்ரைனின் டினீப்ரோ நகரில் ரஷ்யா நடத்திய டிரோன் தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர். 26 பேர் காயம் அடைந்தனர்.

>>>>><<<<<

முன்னாள் துணைப் பிரதமர் திரு எல்.கே. அத்வானியின் பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று அவரை பிரதமர் திரு நரேந்திர மோடி நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

>>>>><<<<<

நடப்பாண்டில் இதுவரை, 67 லட்சத்து 94 ஆயிரம் டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய பணியாளர் நலத்துறை தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

தேசிய அனல் மின் கழகத்தின் 51-வது நிறுவன தின கொண்டாட்டம் ஃபரிதாபாதில் உள்ள அதன் அலுவலகத்தில் மத்திய அமைச்சர் திரு மனோகர் லால் தலைமையில் நடைபெற்றது.

>>>>><<<<<

பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் பயிர்க் கழிவுகள் எரிக்கப்படுவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து காற்றுத் தர மேலாண்மை ஆணையம் ஆய்வு செய்தது.

>>>>><<<<<

நாகையில் நகராட்சி தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கான அரசாணையை, பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்.

>>>>><<<<<

விமானப்படையின் பராமரிப்பு ஆணையரக தலைவர் ஏர் மார்ஷல் விஜய் குமார் கார்க் சென்னை ஆவடி விமானப்படை நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து நேற்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

தென்காசியில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு ஜோதிராமன், மாவட்ட ஆட்சியர் திரு கமல்கிஷோர் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

>>>>><<<<<

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம்-கூடுவாஞ்சேரி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியை ஆட்சியர் திருமதி சினேகா தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

சென்னை, ராயபுரம் மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 7 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளை மாநில அமைச்சர் திரு சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

சென்னையில் பொதுமக்களிடமிருந்து சனிக்கிழமைகளில் பழைய பொருட்கள் பெறப்பட்டு அவை பாதுகாப்பாக எரியூட்டப்படுவதாகவும் இந்த சேவையைப் பெற "நம்ம சென்னை" செயலியில் பதிவு செய்யலாம் என்றும் மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

சென்னையில் செல்லப் பிராணிகளுக்கு வெறிநோய் தடுப்பூசி முகாம் இன்றும், அடுத்த வரும் இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளிலும் 7 மையங்களில் நடைபெறும் என்று மாநகராட்சி கூறியுள்ளது.

>>>>><<<<<

ஆசிய தனிநபர் செஸ் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் வி.எஸ் ராகுல் பட்டம் வென்றார்.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற இப்போட்டியில் இப்பட்டத்தை வென்று, அதிக புள்ளிகளை பெற்றதன் மூலம், இந்தியாவின் 91வது கிராண்ட் மாஸ்டர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

**>>>>><<<<<**

தமிழக அணிக்கு எதிரான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் நேற்றைய முதல் நாள் ஆட்டநேர இறுதியில், ஆந்திர அணி முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 20 ரன் எடுத்துள்ளது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில், தமிழக அணி முதல் இன்னிங்ஸில் 182 ரன் எடுத்துள்ளது.

**>>>>>END<<<<<**